யாழ்/வல்வை மகளிர் வித்தியா 443/க/57
வல்வெட்டித்துறை
VALVAI MAHILIR MAHA VIDYALAYAM VALVETTITURAI LIBRARY

பெயர்: அ. சுமதி

புத்தகம்: கிராஜா தேசிங்கு

எழுதியவர்: சேதிற

அன்பளிப்பு: அ. சுமதி

VALVAI MAHILIR MAHA VIDYALAYAM VALVETTITURAI
LIBRARY
BOOK NO. 104

யா/வல்வை மகளிர்
வல்வெட்டித்துறை

104
893

அன்பளிப்பு :-
A. Sumathi
S/53
284
க சி/2
294-911

# இராஜா தேசிங்கு

அருமைதுரை சுமதி

திருத்திய எட்டாம் பதிப்பு

MAHALIR MAHA VIDYALAYAM LIBRARY BOOK No.
வயா/இலவலை மகளிர் வித்தியாலயம் வல்லிவட்டித்துறை

1952ஆம் ஆண்டு பெப்ப[illegible]தம் 29ஆந் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசா[illegible]தமானப் பத்திரிகையில் உதவி நன்கொடைபெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும், இரு பாஷைப் பாடசாலைகளுக்கும், ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19(A)ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதிற் கமைய இப்புத்த[illegible] ஒரு உப பாட புத்தகமாக 1965ஆம் ஆண்டு டிசம்ப[illegible]தம் 31ஆந்திகதிவரை உபயோகித்தற்கு வித்தியாதிப[illegible] அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

[illegible] 2,
23-[illegible]-60.

குணபால - சேனதிரு
செயலாளர்
பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை

1014

சுன்னாகம் :
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

[பதிப்புரிமை] 1962 [விலை சதம் 60

திருத்திய எட்டாம் பதிப்பு (மறுபிரசுரம்) — 1962

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்

உரிமை பதிவு செய்யப்பட்டது

யா/வலவை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

# பதிப்புரை

பாரதம், இராமாயணம் முதலிய இதிகாச நூல்களிற் காணப்படும் கிளைக்கதைகள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசேட அம்சத்தை உணர்த்த எழுந்தவை. அவை போலவே மற்றைய உபகதைகளும் ஒவ்வொரு விசேட அம்சங்களை விளக்குவன. பரந்த அறிவு விளக்கத்தைத் தர உதவும் இக் கதைகள் முற்காலத்து எல்லாராலும் எங்கும் படிக்கப்பட்டு வந்தனவாயினும் இக் காலத்து இவ் வழக்கம் வரவர அருகி வருகின்றது.

பாடசாலை மாணவர்கள் தம் பள்ளிப்பருவத்திலேயே இவ்விதம் கதைகளைப் படிக்க உதவுவதன் மூலம் அவர்களது அறிவை விசாலிக்க வழி ஏற்படுத்த முடியும். எனவே, இத்தகைய உபகதைகளை உபபாட நூல்களாக ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிப்பது நன்மை பயக்குமெனக் கருதி '**இராஜா தேசிங்கு**' என்னும் இவ் வுபகதை நூலை மாணவர்களுக்கு உபயோகமாகும் வண்ணம் வெளியிட்டுள்ளோம். இப் பதிப்பிற் சில திருத்தங்கள் செய்து, வண்ணச்சித்திரங்களுஞ் சேர்த்துள்ளோம்.


அன்பர்களும் ஆசிரியர்களும் ஆதரவு அளிப்பார்களென எண்ணுகிறோம்.

பதிப்பகத்தார்

*1–10–62*

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | வரலாறு | ... ... | 1 |
| 2. | தேசிங்கின் பிறப்பு | ... ... | 3 |
| 3. | கல்வியும் தோழமையும் | ... | 6 |
| 4. | வேட்டை | ... ... | 9 |
| 5. | மல்யுத்தம் | ... ... | 11 |
| 6. | தேசிங்கின் வெற்றி | ... ... | 13 |
| 7. | விஜயதசமி | ... ... | 15 |
| 8. | சிரோப்சிங்கின் டில்லிப் பிரயாணம் | | 19 |
| 9. | தேசிங்கு டில்லிக்குச் செல்லுதல் | | 21 |
| 10. | குதிரையேற்றம் | ... ... | 24 |
| 11. | திருமணம் | ... .... | 28 |
| 12. | தேசிங்கின் ஆட்சி | ... ... | 31 |
| 13. | நவாப்பின் பொருமை | ... ... | 33 |
| 14. | செஞ்சியில் கலவரம் | ... ... | 37 |
| 15. | தேசிங்கின் போர்க்கோலம் | ... | 41 |
| 16. | கொடிய யுத்தம் | ... ... | 46 |
| 17. | செஞ்சியின் சிதைவு | ... ... | 50 |



தேசிங்கு அறுபது அடி உயரம்பாயப் பயிற்சிபெறல்

Acc. No 284
Class No 810·8113

# இராஜா தேசிங்கு

## 1. வரலாறு

தென்னிந்தியாவிலே செஞ்சி என்னும் பெயருடைய ஒரு சிறந்த நகரம் உண்டு. அந் நகரத்தில் மிகப் பலம் பொருந்திய ஒரு கோட்டை இருந்தது. அது மூன்று மலைகளின் மத்தியிலே அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

2. முன்னொரு காலத்திலே சோழ அரசர்கள் அக் கோட்டையில் இருந்து அரசு செய்தார்கள். அந்தக் கோட்டை, யாரால் எக் காலத்திற் கட்டப்பட்ட தென்பது தெரியாது.

அக் கோட்டை பகைவர் தாக்க முடியாத அரண் பொருந்தியது.

3. அக்காலத்தில் இந்தியாவின் பல இடங்களை முஸ்லீம் அரசர்களிற் பலர் ஆண்டு வந்தனர். அவர்கள் செஞ்சிக்கோட்டையைத் தமதாக்கிக் கொள்ள முயன்றனர். அவர்களில் ஒருவன் டில்லியை ஆண்ட முஸ்லீம் நவாப் ஆவான். அவன் ஒருமுறை செஞ்சிக் கோட்டைமீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக் கொண்டான்.

4. அந்த நவாப், சிரோப்சிங் என்பவனைச் செஞ்சிக் கோட்டையின் சிற்றரசன் ஆக்கினான். சிரோப் சிங் இராஜபுத்திர வீரன். அவன் கோட்டையையும் அதைச் சார்ந்த இடங்களையும் அரசாட்சி செய்தான்.

5. சிரோப்சிங் தனது ஆட்சியைச் சிறிது சிறிதாகப் பலப்படுத்திக் கொண்டான். தனது பிரசைகளின் நன்மைக்காக வேண்டியவற்றைச் செய்தான். நீதி தவருமல் தன் குடிகளைப் பரிபாலனஞ்செய்து வந்தான். அதனுல், குடிகள் அவனிடம் மிகவும் அன்பு கொண்டு அவனைப் புகழ்ந்தார்கள். அவனுடைய புகழ் எங்கும் பரவியது. அதனை யறிந்த பல சிற்றரசர்கள் அவனுடன் நட்புக் கொண்டனர்.

---

## 2. தேசிங்கின் பிறப்பு

சிரோப்சிங் இராம்பாய் என்னும் பெண்ணை விவாகஞ் செய்து, அவளைத் தனது பட்டமகிஷி ஆக்கினுன். இராம்பாய் மிகவும் உத்தமி; சிறந்த கற்புடையவள்; தன் கணவனைக்

கடவுளாக மதிப்பவள். அவர்கள் இருவரும் இல்லற வாழ்க்கையை மிக அன்புடன் நடாத்தினுர்கள். அவர்களுக்கு எல்லாச் செல்வங்களும் இருந்தன. ஆனுல் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கவில்லை. அதனுல் அவர்கள் துக்கப்பட்டார்கள்; தான தருமங்கள் செய்தார்கள்; தீர்த்த யாத்திரை செய்தார்கள். அவர்கள் செய்த தவப் பயனுக ஒரு சற்புத்திரன் பிறந்தான்.

2. தங்களுக்குப் புத்திரப்பேறு கிடைத்ததற்காக அரசனும் அரசியும் மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். வந்தவர்களுக்கு மனங் களிக்கும்படி தான தருமங்கள் செய்தார்கள். அந்த வருடத்திலே குடிகள் வரி செலுத்த வேண்டியதில்லை என்று அரசன் பறையறிவித்தான். அதனுற் குடிகள் ஆனந்தங் கொண்டார்கள்.


தங்கள் தங்கள் வீடுகளிலும் உற்சவங் கொண்டாடி மகிழ்ந் தார்கள்.

3. சிரோப்சிங் தனது மகனுக்கு நன்முகூர்த்தத்தில் **தேசிங்கு** என்று பெயரிட்டான். பெரியோர் வாழ்த்துக் கூறினர். தேசிங்கு நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். அவனுக்கு ஐந்து வயது ஆனது. அரசன், தக்க ஆசிரி யரைத் தேடி, அவரிடம் அவனைக் கல்வி கற்கும்படி வைத்தான். தேசிங்கு கல்வி கற்றதோடு, அரசர் களுக்கு வேண்டிய யுத்தப் பயிற்சி யும் பெற்று வந்தான்.

# 3. கல்வியும் தோழமையும்

தேசிங்கு இளமையில் மிகவுஞ் சுறுசுறுப்புடையவனாய் இருந்தான். அக்கால வழக்கப்படி அவன் சிலம்ப வித்தை கற்கவேண்டி, சிலம்ப வித்தியாசாலைக்கு அனுப்பப்பட்டான். வயதிற் குறைந்தவனாய் இருந்தாலும், ஆசிரியர் கற்பிக்கும் வித்தைகளை மிக அவதானமாகக் கற்றான். தான் கற்றவைகளை மற்றைய மாணவர்களுக்குங் கற்பித்தான். அதனால் அவன் முதல் மாணவனாய் விளங்கினான்.

2. தேசிங்குவுடன் சிலம்ப வித்தை கற்றவர்களுள் முகமத் கான் என்னும் முஸ்லீம் சிறுவன் ஒருவனும் இருந்தான். அவனும் தேசிங்கைப் போன்று சிலம்ப வித்தையில்



தேசிங்கு சிலம்ப வித்தை கற்றல்

வல்லமை பெற்றிருந்தான். அதனால் அவர்களிருவரும் தோழர்களானார்கள். முகமத்கான் தேசிங்கை விட்டுப் பிரியமாட்டான். தேசிங்கு முகமத்கானைத் தனது அரண்மனைக்கு அழைத்துச் செல்வது வழக்கம். அங்கே தனக்கென அமைக்கப்பட்ட சிலம்பக் கூடத்தில் முகமத்கானுடன் முன்படித்த பாடங்களில் அப்பியாசம் செய்வான்.

3. சிரோப்சிங், தனது மகன் எல்லா வித்தைகளிலும் வல்லவனாய் இருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தான். தனக்குத் தெரிந்த குதிரை ஏற்றம், யானை ஏற்றம் முதலிய வித்தைகளையுங் கற்பித்தான். யுத்தப் பயிற்சியிலும் வல்லமை பெறும்படி பழக்கினான். முகமத்கானும் தேசிங்குவுடன் இருந்து எல்லா வித்தைகளையும் படித்தான்.

யா/வல்வை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

# 4. வேட்டை

தேசிங்கு இளமைப் பருவங் கடந்து காளைப் பருவம் அடைந்தான். வயதும் பதினாறு ஆயது. ஒரு நாள் அவன் வேட்டை யாடுதற்கு முகமத் கானுடன் காட்டுக்குச் சென்றான். அவர்களுடன் பலவேடர்களுந் துணையாகச் சென்றார்கள். அவர்கள் பல மிருகங்களை வேட்டையாடினார்கள். தேசிங்கு தன் எதிரே அறுபது அடி தூரம் பாய்ந்து வந்த ஒரு வேங்கைப் புலியைக் குத்திக் கொன்றான். ஆனால், வேங்கை பாய்ந்த அளவு தூரத்தை அவனாற் பாய முடியவில்லை. அதற்காக அவன் மிகவும் வெட்கப்பட்டான்.

2. தேசிங்கு அரண்மனைக்கு வந்தபின், புலியைப்போல அறுபது அடி தூரம் தான் பாய இயலாததை எண்ணி விசனப்பட்டான். எப்படி

யும் அறுபது அடி உயரமும், அறுபது அடி நீளமும் பாயக் கற்கவேண்டு மென்று உறுதிகொண்டான். தன் னுடைய பயிற்சிச் சாலையில் அறுபது அடி உயரத்தில் ஒரு குறி ஏற்படுத்தி னான். அக் குறியைத் தொடுவதற்கு நாள்தோறும் முகமத் கானுடன் பயிற்சி செய்தான்.

3. சில நாட்களிற் குறியைத் தொடக்கூடிய அளவு பயிற்சி பெற் ருன். அங்ஙனம் தொட்டதற்கு அடையாளம் வேண்டுமல்லவா? அவன் தன் கைவிரலிற் சந்தனக் குழம்பைப் பூசிக்கொண்டு பாய்ந்து தன் கைவிரலாற் குறித்த இடத்திலே தொட்டான். முகமத்கான் எவ் வளவோ முயன்றும், அவனுற் குறித்த அடையாளத்தைத் தொட முடியவில்லை. தேசிங்கின் வீர தீரமும் விடாமுயற்சியும் அவன் எண்ணத் தை நிறைவேற்றிவிட்டன.

# 5. மல் யுத்தம்

ஒருநாள் சிரோப்சிங்கின் அரச சபையில் அரசியல் விஷயங்கள் நடைபெற்றுக்கொண் டிருந்தன. அச் சமயத்தில் அயல் நாட்டிலிருந்து ஒரு மல்யுத்த வீரன் அங்கே வந்தான். அவன், "என்னுடன் மல்யுத்தஞ் செய்து வெற்றிகொள்ளக் கூடியவர்கள் ஒருவருமில்லை" என்று கூறிப் பெருமை பேசினன். அப் போது அரண்மனையிற் பல போர் வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் வந்த வீரனைக் கண்டு பயங்கொண்ட வர்கள் போலப் பேசாதிருந்தார்கள்.

2. இதைக் கண்ட சிரோப்சிங், "என்னுடைய வீரர்களில் இவனை வெல்லுந் திறமையுள்ள வீரன் ஒரு வனு மில்லையா?" என்று கூறி வருத்தப்பட்டான். வந்த வீரனுக்

குச் சன்மானஞ்செய்து அனுப்பி விட எண்ணினுன். இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த தேசிங்கு, “அப்பா, இவனுடன் யான் மற் போர் செய்கின்றேன்; உத்தரவு தாருங்கள்” என்ருன்.

3. அரசனுக்குத் தன் மகனை அவனுடன் மல் யுத்தத்திற்கு விட மனந் துணியவில்லை. தேசிங்கு பல முறை வற்புறுத்தியதால், அரசனும் ஒருவாறு இயைந்தான். அயல் நாட்டு வீரன் அரச குமாரனுடன் யுத்தஞ்செய்ய மிகவும் பிரியப்பட் டான். அரச குமாரனைத் தோல்வி யுறச் செய்தால், அரசன் தன்மீது சினங்கொள்வானே என்ற பயமும் அவனுக்கிருந்தது. அதனுல் அவன் தயங்கினுன். தேசிங்கு அந்த வீர னின் எண்ணத்தை உணர்ந்தான். அவனை நோக்கி, “வீரனே, பயப்

படாதே; நீ என்னை வெற்றி கொண்டால், தந்தையார் உனக்கு வேண்டிய பரிசில்களைக் கொடுப்பார்; உன் மீது கோபங் கொள்ளமாட்டார். ஆகையால், உனது மயக்க எண்ணத்தை விடுத்து உனது வீரத்தை என்னிடங் காட்டுக" என்று கூறினன்.

## 6. தேசிங்கின் வெற்றி

வீரன் தேசிங்கை நோக்கி, "அரச குமாரா! நீ என்னுடன் எதிர்ப்பது, சிங்கத்துடன் எலி எதிர்ப்பதுபோலாகும். வீணிலே தோல்வியடைந்து துயருருதே" என்று கூறி நகைத்தான். தேசிங்கு மிகவுங் கோபங் கொண்டான். "அடே! நீ ஆண்பிள்ளையானல் என் எதிரே வந்து நில். இல்லை

யேல், உன் விருதுகளைக் கழற்றி இவ்விடத்தில் வைத்துவிட்டு ஓடிப் போ" என்று ஆவேசத்துடன் கர்ச்சித்தான். வீரனுக்கும் கோபம் மூண்டது. அவன் மல்யுத்தஞ் செய்வதற்கு ஆயத்தனாகத் தேசிங்கின் எதிரே வந்தான். இருவரும் ஒருவரோடொருவர் போர் புரிந்தார்கள். "இந்தப் பெரிய வீரனுடன் அரசன் தன் மகனை யுத்தத்துக்கு விடலாமா" என்று சபையிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள்.

2. வீரன் தேசிங்கைக் கீழே வீழ்த்தினான். அவன் மிகத் துரிதமாக எழுந்தான். வீரன் முன்பு நின்று, அவனுடைய கழுத்திற் கையைப் போட்டான். முழங்கையைப் பற்றிப் பின்புறமாக வந்தான். சில விநாடிக்குள் வீரனைக் கீழே வீழ்த்தினான். அவனுடைய முதுகு நிலத்திலே படியும்படி அமுக்கினான்.

3. தேசிங்கின் வெற்றி யாவர்க்கும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. அயல்நாட்டு வீரன், தேசிங்கைப் பலவாறு புகழ்ந்தான். தேசிங்கு அவ் வீரனின் திறமையைக் கூறி, அவனுக்குச் சன்மானஞ் செய்யும்படி தந்தையிடம் வேண்டினுன். சிரோப் சிங் தன் மகனுடைய விருப்பப்படி வீரனுக்குச் சன்மானம் வழங்கினுன். தேசிங்கு, வீரனுக்கு அவமரியாதை உண்டாகாமல், இனிய வார்த்தைகள் கூறி உபசரித்து அவனை வழி அனுப்பினுன்.

# 7. விஜயதசமி

அக்காலத்தில் தமிழ் அரசர்கள், விஜயதசமியி லன்று வெற்றி விழாக் கொண்டாடுவது வழக்கம். அவ் விழாவுக்கு அயல் நாடுகளில்

இருந்து வித்தைகளிற் பயிற்சி பெற்ற பல வீரர்கள் வருவார்கள்.

2. பிரான்சு தேச வீரன் ஒருவன் செஞ்சிக் கோட்டைக்கு அன்று வந்திருந்தான். அவன் தன்னுடன் ஒரு சிங்கத்தையும் கொண்டு வந்தான். சிங்கம் கூட்டினுள் இருந்தது. அவன் சபையில் உள்ளவர்களைப் பார்த்து, "இச் சிங்கத்தின் கழுத்திலிருக்கும் ஆடையை யார் அவிழ்க்கிறார்களோ, அவருக்கு யான் அடிமை" என்று கூறினான்.

3. அங்கிருந்த வீரர்கள் மௌனமாக இருந்தார்கள். அரசன் மெதுவாகச் சிங்கக் கூட்டின் அருகே சென்றான். சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டதும் திரும்பி வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

4. தேசிங்கு இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு



சிங்கக் கூட்டினுள் தேசிங்கு

மனஞ் சகிக்கவில்லை. ஒரு ஈட்டியுடன் கூட்டினுள்ளே பிரவேசித்தான். சிங்கம் பூமி அதிரும்படி கர்ச்சித்துத் தேசிங்கின் மேற் பாய்ந்தது. தேசிங்கு ஒருபக்கமாக ஒதுங்கி நின்று ஆடையை அவிழ்த்தான். பின் ஈட்டியால் சிங்கத்தைக் குத்தினான். சிங்கம் ஈட்டியைக் கௌவிற்று. தேசிங்கு வெளியே வந்தான். ஆடையைத் தன் தந்தையிடம் கொடுத்தான். அரசன் மிகுந்த மகிழ்ச்சியுடன் மகனை அணைத்துக் கொண்டான்.

5. பிரான்சு தேச வீரன் தேசிங்கைப் புகழ்ந்தான். தன்னை அடிமையாக்கும்படி வேண்டினான். தனது கைத் துப்பாக்கியையுங் கொடுத்தான். கைத் துப்பாக்கியை மாத்திரம் தேசிங்கு பெற்றுக்கொண்டான். வீரனை அடிமையாக்க அவன் விரும்பவில்லை.

# 8. சிரோப்சிங்கின் டில்லிப் பிரயாணம்

வட இந்தியாவிலே டில்லி என்னும் பெயருடைய நகரத்தை முஸ்லீம் நவாப் அரசாண்டான். அவனிடத்தில் யாருக்கும் அடங்காத ஒரு குதிரை இருந்தது. அவன் ஒருநாள் தனது மந்திரிகளை அழைத்துத் தன் குதிரையை அடக்கக்கூடிய வீரர்கள் யாராவது இருக்கிறார்களா என்று அவர்களுடன் ஆலோசித்தான். செஞ்சிக் கோட்டையை ஆளும் சிரோப்சிங்குதான் குதிரையை அடக்கக்கூடியவன் என்று அவர்கள் கூறினார்கள். உடனே தூதுவரைச் செஞ்சிக்கு அனுப்பினான்.

2. செய்தி கிடைத்தவுடன் சிரோப்சிங் டில்லிக்குப்புறப்பட்டான். சிரோப்சிங் வருவதை நவாப் அறிந்து,

அவனை வரவேற்ருன். சிரோப்சிங் நவாப்பை வணங்கி, தன்னை வரவழைத்த காரணத்தைத் தெரிவிக்கும்படி வேண்டினன்.

3. நவாப், தன் குதிரை நிற்கும் இலாயத்திற்குச் சிரோப்சிங்கை அழைத்துச்சென்ருன். குதிரையைக் காட்டி, “ இக் குதிரை ஒருவருக்கும் அடங்காமல் நிற்கின்றது. இதை அடக்கும் ஆற்றல் உமக்கு உண்டு என்பதை அறிந்தேன்; அதனுற்ருன் உம்மை வரவழைத்தேன்” என்று கூறினன்.

4. சிரோப்சிங் குதிரையைப் பார்த்தான். அதை அடக்குவதாகக் கூறினன். குதிரையின் கிட்டச் சென்று அதைப் பிடித்தான். குதிரை அவனை ஏமாற்றி அட்டகாசஞ் செய்தது. அடியின் உறைப்பினுற் குதிரை

வேகமாக ஓடத் தொடங்கியது. அரசன் மிகவும் களைத்துப்போனான். பல வீரர்கள் குதிரையை வளைத்து இலாயத்திற் சேர்த்தார்கள். அரசன் மிகவும் வெட்கப்பட்டான். குதிரையை அடக்காமற் செஞ்சிக்குத் திரும்புவதில்லை என்று சபதமிட்டான்.

---

## 9. தேசிங்கு டில்லிக்குச் செல்லுதல்

பல வாரங்கள் சென்றன. சிரோப்சிங் செஞ்சிக்குத் திரும்பி வரவில்லை. இராணி இராம்பாய் மிகவும் மனங் கலங்கினாள். அதனால் நோய்வாய்ப்பட்டாள். தேசிங்கு தாயிடஞ் சென்று நடந்த விஷயத்தை

அறிந்தான். தன் குல தெய்வத்தை வணங்கிக்கொண்டு உடனே டில்லிக்குப் புறப்பட்டான்.

2. தேசிங்கு டில்லிக்குச் சென்று தந்தையைக் குறித்து விசாரித்தான். அரசன் குதிரையை அடக்கிய பின்பே செஞ்சிக்குத் திரும்புவதாகச் சபதஞ் செய்திருப்பதை அறிந்தான். தானே அடக்கவேண்டுமென்ற எண்ணம் அவனுக்குண்டாயது. நவாப்பின் அரண்மனைக்குச் சென்று குதிரையைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி வேண்டினான். தேசிங்கின் வீரச் செயல்கள் நவாப்புக்குத் தெரியாதபடியால், "அப்பா! நீயோ சிறுவன். இந்தக் குதிரை எத்தனையோ அரசர்களை மானபங்கஞ் செய்துவிட்டது. நீ இக் காரியத்திற் பிரவேசிக்காதே" என்று கூறினான்.

3. " ஐயா ! நான் தங்கள் குதிரையை அடக்கிப் பரிசுபெற வந்தவனேயன்றித் தங்களிடம் பிச்சைக்கு வந்தவனல்லன். குதிரையை அடக்கித் தரும் ஆற்றல் உடையவரையல்லவா தாங்கள் விரும்புவீர்கள் ? யான் அதனை அடக்குவேன் ; இல்லையாயின் தங்களுக்கு அடிமையாவேன்" என்று தேசிங்கு உற்சாகத்துடன் கூறினான்.


4. நவாப் மீண்டும், " நீ சிறுவனாயிருப்பதால் எச்சரிக்கை செய்தேன். உன் இஷ்டப்படியே செய்கிறேன். நாளைக் காலையில் இங்கே வா" எனக் கூற, தேசிங்கு நவாப்புக்கு வந்தனம் அளித்து அரண்மனையை விட்டுச் சென்றான்.

---

# 10. குதிரையேற்றம்

அடுத்த நாட் காலை, தேசிங்கின் குதிரை யேற்றத்தைக் காணப் பெருந் திரளான மக்கள் கூடினர். பல ஊர்களிலு மிருந்து கூட்டங் கூட்டமாகச் சனங்கள் வந்து சேர்ந் தார்கள். வந்தவர்கள், 'இந்தக் குதி ரையை இச்சிறுவன் அடக்குவானோ?' என்று பேசிக்கொண்டார்கள். நவாப், முன் யோசனையுடன் எல்லாவித மான பாதுகாப்புக்களுஞ் செய்வித் திருந்தான்.

2. அப்பொழுது, அந்த அடங் காத குதிரையை வீரர்கள் பலர் பிடித்துக்கொண்டு வந்தனர். தேசிங்கு மஞ்சள் உடை தரித்துக் கொண்டு குதிரை நிற்கும் இடத் துக்கு வந்தான். அங்கே கூடிநின்ற வர்களின் பார்வை தேசிங்கின்



குதிரையேற்றம்

இ - 4

உருவத்திலேயே பதிந்துவிட்டது. சிரோப்சிங், குதிரையை அடக்க வந்திருப்பவன் தன் மகனென அறிந்தான்; பயங் கொண்டான்; தேசிங்கின் முன் ஓடிவந்தான். "உன்னுலாகாத இச்செயலிற் பிரவேசிக்காதே, மகனே" என்று மன்ருடினன். தேசிங்கு, "அப்பா, நான் இக் குதிரையை நிச்சயமாக அடக்குவேன். பயப்படாதீர்கள்" என்று உறுதியுடனும் பணிவுடனும் கூறினன்.

3. தேசிங்கு, தந்தையையும் நவாப்பையும் வணங்கினன். குதிரையைப் பிடித்துக்கொண்டு நிற்கும் வீரர்களைப் பார்த்து, குதிரைமீது ஏறும் வரையும் பிடியை விடாதிருக்கும்படி கட்டளை இட்டான். தேசிங்கு குதிரையில் ஏறினன். கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்தான். வீரர்களை விலகும்படி சொன்னன்.

குதிரை மிக வேகமாக ஓடத் தொடங்கியது. தேசிங்கு தன் முழுச் சக்தியுடன் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான்.

4. அவன் கடிவாளத்தை இழுக்க இழுக்கக் குதிரையும் அதிக வேகமாக ஓடியது. தேசிங்கு கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, முகங் குப்புறக் குதிரை மீது படுத்துக்கொண்டான். குதிரை தேசிங்கைக் கீழே வீழ்த்துவதற்கு மிகவும் பிரயத்தனப்பட்டது. அவனும் பிடித்த பிடியை நெகிழ விடவில்லை. வெயிலின் கொடுமையாற் குதிரை களைத்தது. கடிவாளத்தின் வலியும் அதிகரித்தது. குதிரையினால் முன்போல ஓட முடியவில்லை. அப்போது தேசிங்கு குதிரையைத் தன் இஷ்டம்போலத் திருப்பி, நவாப்பின் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தினான்.

# 11. திருமணம்

தேசிங்கின் வெற்றி எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. நவாப் அளவில்லா ஆனந்தங் கொண்டான். குதிரைமீதிருந்த தேசிங்கை, இரு கைகளாலும் அணைத்துக் கீழே இறக்கினான். சனங்கள் வெற்றி முழக்கம் செய்தனர். சிரோப்சிங் மகனைத் தழுவி முத்தமிட்டான். நவாப், தேசிங்குக்குச் செய்யவேண்டிய சிறப்புக்கள் எல்லாவற்றையுஞ் செய்து அவனை **இராஜா** என்று அழைத்தான். அன்று தொடக்கம் '**இராஜா தேசிங்கு**' என அவன் பெயர் வழங்குவதாயிற்று.

2. வீமசிங் என்பவன் நவாப்பின் சேனாதிபதிகளில் ஒருவன். அவன் சந்தோஷ மிகுதியால் தனது மகள் இராணிபாயைத் தேசிங்கு

இராஜனுக்கு மணஞ் செய்து கொடுப்பதாகச் சொன்னான். நவாப்பும் அதற்கு இசைந்து தனது ஊரிலேயே விவாகத்தைச் செய்ய வேண்டுமென்று விரும்பினான். சிரோப்சிங்கும் நவாப்பின் எண்ணத்துக்கு இயைந்தான். சிரோப்சிங் தனது மனைவிக்கும் அரண்மனையிலுள்ளவர்களுக்கும் திருமணச் செய்தியைக் கடிதமூலமாக அறிவித்தான். செஞ்சியி லுள்ளவர்கள் டில்லிக்கு வந்து சேர்ந்தனர். இராம்பாய் தன் மகனுடைய வீரச் செயல்களைக் கேட்டு மிகவும் பரவசமடைந்தாள்.

3. திருமணத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் யாவுஞ் செய்யப்பட்டன. அக்கால வழக்கப்படி தேசிங்கு நன் முகூர்த்தத்தில் இராணிபாய்க்குத் திரைமறைவில் மாலை சூட்டினான். கலியாண வைபவத்துக்குப் பல தேசங்களிலிருந்து அரசர்களும்

பிரதானிகளும் வந்திருந்தனர். அவர்கள் யாவரும் மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினர். நவாப் தனது அடங்காக் குதிரையையும், வைரமிழைத்த வாள் ஒன்றையும் சன்மானமாகக் கொடுத்தான். சில நாட்கள் கழிந்தன. சிரோப்சிங் மணமக்களை அழைத்துக்கொண்டு செஞ்சிக்குத் திரும்பினான்.

4. தேசிங்கின் திருமணச்செய்தி செஞ்சியில் உள்ளவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. சிரோப்சிங்கும் மற்றையோரும் செஞ்சிக் கோட்டைக்கு வந்து சேர்ந்தனர். கோட்டையில் திருமண வைபவம் கொண்டாடினார்கள். வந்தவர்களுக்கு அரசர் பல தான தருமங்கள் செய்தார். குடிகளும் மற்றவர்களும் மணமக்களை வாழ்த்தித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

# 12. தேசிங்கின் ஆட்சி

திருமணத்தின் பின்னர், செஞ்சி யின் அரசாட்சி மிகச் சிறப்பாக நடை பெற்றது. சிலகாலஞ் சென்றபின்பு சிரோப்சிங் நோய்வாய்ப்பட்டான். வைத்திய சிகிச்சைகள் செய்யப்பட் டன. ஆயினும் அரசன் மரண மடைந்தான். அவன் மனைவியாகிய இராம்பாயும் அக்கால வழக்கப்படி கணவனோடு தீயில் மூழ்கி இறந் தாள். தேசிங்கு தந்தை தாயரை இழந்த துயரால் மிகவும் கவலைப்பட் டான்.

2. சிரோப்சிங் இறந்த அக் காலத்திலே, டில்லியை ஆண்ட நவாப்பும் இறந்தான். தேசிங்கு தந்தை தாயரை இழந்த துக்கத்தில் ஆழ்ந்திருந்தான். வயதில் முதிர்ந்த பெரியோர்கள் பலர் புத்திமதி கூறி

அவனைத் தேற்றினர். அவன் தந்தையின் இராச்சிய பாரத்தை ஏற்றுக் கொள்ள ஒருவாறு இயைந்தான். முடிசூட்டு விழா விமரிசையாக நடைபெற்றது. அப்பொழுது தேசிங்குக்கு வயது இருபத்திரண்டு.

3. தேசிங்கு சிம்மாசனம் ஏறியதும், தனது குடிகளின் நன்மைக்காகச் செய்ய வேண்டியவைகளை ஆலோசித்தான். வரிப் பணத்தின் பெரும் பாகத்தைக் குடிகளின் நன்மைக்காகச் செலவிட்டான். ஆங்காங்கு குளங்கள், வடிகால்கள் அமைப்பித்தான். கமச் செய்கையை விருத்தி செய்வித்தான். உத்தியோகத்தருடன் ஆலோசித்து, நாட்டின் குறைகளை நீக்கினான். இரத்தினகிரி என்னுமிடத்தை அரண் செய்தான். தனது தோழனாகிய முகமத்கானை இராணுவத் தலைவனாக நியமித்தான்.

கல்வெட்டுத்துறை



4. தேசிங்கு தான் விவாகஞ் செய்துகொண்டதால் தனது தோழனாகிய முகமத்கானும் விவாகஞ்செய்தல் வேண்டுமென்று விரும்பினான். முகமத்கானை அழைத்து, விவாகஞ் செய்யும்படி கூறினான். அவன் விவாகஞ் செய்துகொள்ள விரும்பவில்லை. தேசிங்கின் சொல்லை மறுக்கவும் முடியவில்லை. ஈற்றில் தேசிங்கின் சொற்படி நடப்பதாகக் கூறினான். தேசிங்கு, முகமத்கானின் திருமணத்துக்காக வேண்டிய பொருள்களைக் கொடுத்து, அவனை வழுதாவூருக்கு அனுப்பினான்.

## 13. நவாப்பின் பொறாமை

செஞ்சியில், தேசிங்கின் ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அக்காலத்தில் டில்லியை அரசாண்ட நவாப்பு, தேசிங்கின்

ஆட்சி பலமடைவதைக் கண்டு பொருமை கொண்டான். எப்படி யாவது அவனை அடக்க வேண்டு மென்று எண்ணினான். மற்றைய சிற்றரசர்களையும் அழைத்து அவர்க ளுடன் ஆலோசனை செய்தான். "உங்களைப்போன்ற ஒரு சிற்றரசன், பன்னிரண்டு வருடமாகக் கப்பஞ் செலுத்தாமல் இருக்கின்றான். முன் னிருந்த நவாப்பும் அவனிடம் கப்பம் வாங்கவில்லை. ஆகையால், அவனிட மிருந்து வரவேண்டிய கப்பப் பணத் தைப் பெறல்வேண்டும். அன்றேல், போருக்கெழுதல்வேண்டும். இதற்கு உங்கள் சம்மதத்தைப் பெறவே அழைத்தேன்" என்று நவாப் கூறி னான். அவர்கள் நவாப்பின் விருப் பமே தங்கள் விருப்பமென்று கூறி னார். நவாப், தனது வீரர்களில் ஒருவனை தோன்றுமல்லன் என் பவனைத் தேசிங்குவிடம் சென்று

பன்னிரண்டு வருடக் கப்பப் பணத்தையும் பெற்றுவருமாறு கூறினான்.

2. தோன்ருமல்லன் தேசிங்குவிடம் செல்வதற்கு அஞ்சினான். தேசிங்கு விஷ்ணுவிடத்தில் பக்தியுடையவன் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால், ஒரு விஷ்ணு பக்தனைப் போல வேடமிட்டுக் கொண்டு தேசிங்கின் அரண்மனையை அடைந்தான். விஷ்ணு பக்தனைக் கண்ட தேசிங்கு, அவனை மரியாதையாக வரவேற்று, “நீர் யார்” என்று வினவினான். அவன் நவாப்பின் கட்டளையைத் தெரிவித்தான். அதைக் கேட்ட தேசிங்கு, கோபங் கொண்டான். தோன்ருமல்லனை விழித்து நோக்கினான். அவனுடைய பார்வை தோன்ருமல்லனின் உள்ளத்தைக் கலங்கச் செய்தது.

3. “அடா! முட்டாளே! சிறிதும் அச்சமின்றி என்னிடம் கப்பப் பணம் பெற உன்னை அனுப்பினனா அந்த முகமதியப் பயல்? நீ விஷ்ணு பத்தனாயிருப்பதால் உன்னைக் கொல்லாது விடுகிறேன்; உடனே செல். அந்த அற்ப முகமதியனுக்குக் கப்பப் பணம் வேண்டுமானல், போரில் வெற்றி கொண்ட பின்னர் பெற்றுக் கொள்ளும்படி சொல். இவ்விடத்தில் நில்லாதே. சென்றுவிடு” என்று தேசிங்கு கோபாவேசத்துடன் கூறினன். தோன்ருமல்லன் ‘தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்’ என்று மனதுக்குள் கூறிக்கொண்டு, வந்த வழியே திரும்பிச் சென்ருன். தேசிங்கு கூறியவற்றை நவாப்பிடம் தெரிவித்தான்.

---

# 14. செஞ்சியில் கலவரம்

முகமத்கான் விவாகஞ் செய்வதற்காக வழுதாவூருக்குப் போன பின்பு, செஞ்சி இராணுவத்திலே பல மாற்றங்கள் ஏற்படலாயின. அதனால் அதிகாரிகளுக்கிடையில் பிணக்குகள் உண்டாயின. அந்தச் சமயத்தில் நவாப், ஒரு வீரனைச் செஞ்சிக்கு அனுப்பி, செஞ்சிக் கோட்டையின் இரகசியங்களை அறிந்துகொண்டான்.

2. நவாப், தேசிங்குடன் யுத்தஞ் செய்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தான். தனக்குட்பட்ட பாளையக்காரர்களையும் சிற்றரசர்களையும் சேர்த்துக்கொண்டான். தன் சேனைக்குத் தலைவனாகத் தாவுத்கானை நியமித்தான். தாவுத்கான் சேனைகளை அணிவகுத்துக்கொண்டு

சங்கராபரணி ஆற்றங் கரைக்குச் சென்று அங்கே பாடிவீடு அமைத்திருந்தான். அங்கிருந்துகொண்டு போர்முரசு முழக்கினான்.

3. போர் முழக்கத்தைக் கேட்ட சனங்கள் கலவர மடைந்தார்கள். வேற்றரசன் படையெடுத்து வந்து விட்டான் என்று பயங் கொண்டார்கள். தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் நாட்டைவிட்டுப் புறப்பட்டார்கள். “முறையோ! முறையோ!!” என்று கூக்குரலிட்டார்கள். நவாப்பின் படை வீரர்கள் நாட்டிற் புகுந்து பொருள்களைக் கொள்ளையிட்டனர். அதனாற் சனங்கள் பயந்து செஞ்சிக் கோட்டைக்கு ஓடோடி வந்து சேர்ந்தனர். தேசிங்கின் அரண்மனையை அடைந்தனர். தங்கள் முறையீட்டைத் தெரிவித்தனர்.

4. அச்சமயத்தில் தேசிங்கு அரண்மனையில் இல்லை. அவன் தனது குலதெய்வமாகிய அரங்கநாதர் கோயிலுக்குச் சென்றிருந்தான். குடிகளின் முறையீட்டைக் கேட்ட அரண்மனைக் காவலர் அரசனிடம் தெரிவிப்பதற்காகக் கோயிலுக்குச் சென்றனர். மக்களும் அவன் பின்னுற் சென்றனர். தேசிங்கு பூஜை செய்துகொண்டிருந்தான். அவனுடைய மனம், வாக்கு, காயம் என்பன கடவுளிடத்தே பதிந்து பரவசப்பட்டிருந்தன. அதனுற் குடிகளின் முறையீடு அவன் காதுகளிற் புகவில்லை.

5. அரசன் தங்கள் முறையீட்டைக் கேட்க வெளி வராததால், சனங்கள் கோயிலுட் புகுந்தனர். அப்பொழுதுதான் தேசிங்கு கண்

விழித்தான். குடிகளின் முறையீட்டைக் கேட்டான். கண்கள் சிவந்தன. மீசை துடித்தது. பற்களை நறநறவென்று கடித்தான். குடிகளுக்குத் தேறுதல் கூறினான். பழிக்குப்பழி வாங்குவதாக உறுதி அளித்தான்.


6. தேசிங்கு அரண்மனைக்குச் சென்றான். கஷ்டப்பட்ட குடிகளுக்குத் தானியம் முதலிய பொருள்கள் கொடுக்கும்படி பிரதானிகளுக்குக் கட்டளையிட்டான். சேனாதிபதிகளை அழைத்தான். முகமத்கானை அழைத்து வரும்படி வழுதாவூருக்கு ஆளனுப்பினான்.

# 15. தேசிங்கின் போர்க்கோலம்

தேசிங்கு நவாப்புடன் போர் புரிவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தான். அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். தனது மனைவியிடம் விடைபெற விரும்பினான். சோதிடர்கள் தெரிவித்தபடி மூன்று வருடம் முடிவதற்குமுன் மனைவியைப் பார்க்கக்கூடாதென்பது அவனுக்குத் தெரியும். அப்படியிருந்தும், அவன் கன்னிகாமாடத்துக்கு நேரே சென்றான். இராணிபாயின் தோழிகள் அரசன் வரவைத் தெரிவித்தார்கள். அவள் மூன்று வருடம் கழிவதற்கு இன்னும் சில நாட்களே இருப்பதாகத் தெரிவித்தாள். அதனால் தேசிங்கு இருவருக்கும் மத்தியில் திரை கட்

டும்படி செய்து, திரை மறைவில் இருந்து பேசினுன்.

2. இராணிபாய், தேசிங்கு போருக்கெழுந்தகாரணத்தைவினவி அறிந்தாள். தானுங் கூட வருவதாகத் தெரிவித்தாள். பெண்கள் போர்க்களத்திற்கு வருதல் கூடாதென்று தேசிங்கு மறுத்தான். தனக்கு விடை தரும்படி வேண்டினுன். அரசி, "பிராணநாதா! இன்றுவரையிலும் தங்கள் முக அழகைக் கண்டேனில்லை. கரத்தின் அழகையாவது பார்த்து மகிழ உத்தரவு தரல் வேண்டும்" என்று கேட்டாள். அவன் உடை வாளினுலே திரையைக் கிழித்துத் தன் கையை நீட்டினுன். அவள் அவனுடைய கையழகைக் கண்டாள்; முத்தமிட்டாள். அவனும் விடை பெற்றுச் சென்றுன்.



தேசிங்கு தனது மனைவியிடம் விடைபெறல்

3. தேசிங்கு யுத்த வீரர்களைப் பார்வையிட்டான். அவர்களுக்குத் திடமுண்டாகும்படி வீரவார்த்தைகள் கூறினான். "ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு என்பதை அறியுங்கள்! கடைசிவரையிலுந் தைரியமுடையவர்களா யிருங்கள்!" என்று கூறினான். அப்பொழுது முகமத்கான் மணக்கோலத்துடன் தேசிங்கின் முன்பு வந்தான். முகமத்கானைக் கண்டதும், தேசிங்கு அதிசயப்பட்டான். "மணம் முடிந்ததா?" என்று வினவினான். முகமத்கான், "மன்ன, போர் என்று கேட்டவுடன் மணத்தை நிறுத்திவிட்டு வந்தேன்" என்று விடையிறுத்தான். தேசிங்கின் மனம் மாறியது. "விவாகம் என்பதை மறந்தன்றோ ஆளனுப்பினேன். நீ கையிற் கட்டிய கங்கணத்துடன் மணத்தை நிறுத்திவிட்டு வரலாமா?" என்று கடிந்தான்.

4. முகமத்கான், " அரசே, தங்கள் இராச்சியத்தைப்பகைவன் கைப்பற்றப் படையெடுத்து வந்திருப்பதை அறிந்தபின், எனது சொந்தக் காரியத்தில் மனம் வைப்பதெப்படி? உடனே போருக்குப் புறப்படுவதற்கு உத்தரவு தாருங்கள்" என்று பலவாறு சமாதானங் கூறினன்.

5. நண்பனின் இராச விசுவாசத்தைத் தேசிங்கு மெச்சிப் புகழ்ந்தான். தன் வீரர்களுக்கு உற்சாகமூட்டினன். முகமத்கான் போர்க்கோலங் கொண்டான். தானே மாற்றான் படைகளை முறியடித்து வெற்றியுடன் திரும்புவதாகக் கூறினன். தேசிங்கும் அவனுடைய விருப்பத்துக்கு இணங்கினன்.

---

# 16. கொடிய யுத்தம்

முகமத் கான் தலைமையிலே படைகள் அணிவகுத்துச் சென்றன. நவாப்பின் சேனைகளுக்குத் தாவுத் கான் தலைவனாய் நின்றான். இரு சேனைகளும் ஒன்றோடொன்று பொருதின. கொடிய யுத்தம் நடைபெற்றது. நவாப்பின் சேனைகள் ஆற்றாது புறங்காட்டி ஓடின. முகமத் கான் குதூகலத்துடன் பகைவர் சேனைகளைத் துரத்திச் சென்று வெற்றிமுரசறைந்தான். தாவுத் கான் அவமானத்துடன் ஒதுங்கி மறைவாக நின்று, முகமத் கானைக் கொன்றான். அவன் இறந்ததும், தாவுத் கான் சிதைந்து ஓடிய படைகளை மீண்டும் திரட்டினான்.

2. செஞ்சி வீரர்கள், தங்கள் தலைவன் வஞ்சகமாகக் கொல்லப் பட்டான் என்ற செய்தியைத் தேசிங்கு மன்னனுக்குத் தெரிவித் தார்கள். தன் உயிரினும் இனிய தோழன் இறந்த செய்தியைக் கேட் டதும், தேசிங்கு மனங் கலங்கினான். வஞ்சகமாகக் கொன்ற செய்தி அவன் மனதை வாட்டியது. மிகுந்த ஆவேசத்துடன் போர் முனைக்குப் புறப்பட்டான். தேசிங்கின் வருகை யைக் கண்ட நவாப்பின் படைகள் அஞ்சி ஒடுங்கின. தாவுத்கான் எவ் வளவோ முயன்றும் தன் படை களைத் திருப்பி யுத்தம் செய்ய முடிய வில்லை. சைனியங்கள் புறமுதுகிட்டு ஓட்டமெடுத்தன. தேசிங்கு அவர் களைத் துரத்திச் சென்றான். அவன் கையில் அகப்பட்டவர்கள் பிணமா யினர்.

3. நவாப் தனக்கு அழிவுகாலம் கிட்டிவிட்டதென உணர்ந்தான். தோன்ருமல்லனைத் தேசிங்கிடம் அனுப்பிச் சமாதானம் வேண்டும்படி கூறினன். தோன்ருமல்லன் தேசிங்கு முன்பாக வந்து வணங்கினன். "நவாப் சமாதானம் வேண்டுகின்ருர். தங்களுக் கேற்பட்ட நட்டங்களைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிருர்" என்று கூறினன். அதைக் கேட்ட தேசிங்கு, "எனதாருயிர் நண்பனும் முகமத்கானை அவன் கொடுப்பான? யான் சமாதானத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன். நவாப் தனது இராச்சியத்தைக் கொடுக்க வேண்டும்; அல்லது நான் சாகவேண்டும்" என்று வன்மொழி கூறி நின்ருன். தோன்ருமல்லன் தேசிங்கு கூறியவற்றை நவாப்புக்குத் தெரிவித்தான்.

பு. ஆலை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை



நவாப் இன்னது செய்வதென் றறியாது திகைத்தான். இதற்கிடையில் நவாப்பின் சேனைகளை அழித்துக் கொண்டு தேசிங்கு அவனைக் கிட்டி வந்தான். தனது தோழனைப் பதுங்கி இருந்து வஞ்சகமாகக் கொலைசெய்த தாவுத்கான் ஒளித்திருப்பதைக் கண்டான். உடனே அவன்மேற் பாய்ந்து வாளினலே அவன் சிரத்தைத் துணித்தான். தாவுத்கான் இறந்ததைக் கண்ட நவாப் ஓடி ஒளித்துக்கொண்டான்.

# 17. செஞ்சியின் சிதைவு

தேசிங்கு வெற்றி முழக்கமிட்டான். தனக்குப் பகைவர் இல்லாதிருப்பதைக் கண்டான். அவனுக்குத் தன் நண்பனின் ஞாபகம் வந்தது. உடனே, ஓடிச்சென்று முகமதுகானின் உடலத்தைத் தேடிக் கண்டெடுத்தான். "ஓ! ஓ!" என்று கதறி யழுதான். உயிரினும் இனிய நண்பன் தன்பொருட்டு உயிர் விட்டதை எண்ணிக் கலங்கினான்; ஓடினான்; ஆடினான்; சித்தப் பிரமை கொண்டவன் போல் உளறினான்; செய்வதின்னதென்று உணராமல், தன் உடைவாளாலே தன்னைத் தானே குத்திக்கொண்டிறந்தான்.

... வித்தியாலயம் ...வெட்டித்துறை



2. தேசிங்கு இறந்த செய்தி இராணி பாய்க்கு அறிவிக்கப் பட்டது. யுத்தஞ் செய்து வெற்றி கொண்டபின், தன் கணவன் தனது நண்பனின் பிரிவாற்ருது உயிர் விட்டான் என்பதை அவள் அறிந்தாள். உடனே தீ வளர்க்கும்படி உத்தர விட்டாள். "எனது நாயகன் சென்ற இடத்துக்கே நானுஞ் செல்கிறேன்" என்று சொல்லித் தீயிற் குதித்து உயிர் விட்டாள்.

3. இராணி பாயின் செயலைக் கண்டோர் அனைவரும் திகிலடைந் தனர். நவாப் மிகவும் மனங் கலங்கி ஞன். அவளின் கற்பு நெறியைப் புகழ்ந்தான். தேசிங்கின் வீரச் செய லைப் போற்றிஞன். தன் அறியா மைக்காக இரங்கிஞன். செஞ்சிக் கோட்டையைத் தன்வசமாக்கிஞன்.

4. தேசிங்கின் வீரச் செயல்கள் நிலவுலகம் உள்ளளவும் நிலவுவதாயின. அவன் வீர சுவர்க்கம் எய்தினன். தனது அரச வாழ்வையும் தான்கொண்ட வெற்றியையும் பொருட்படுத்தாது, நண்பனுக்காகத் தன் உயிரைத் தியாகஞ்செய்த வீர புருடரென்று உலகம் இன்றும் அவனைப் போற்றுகின்றது.

சுபம் !

யா/வல்வை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

யா/வல்வை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

யா/வல்வை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

யா/வல்வை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை